

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 17.04.2025 | 16. சிருஷ்டிப்பு மலர்களும் குருவிகளும் என் சிருஷ்டிகரை தழுவச்செய்தது! |
|---|---|



**தே**வனே தனது சிருஷ்டிப்பின் அழகின் மூலமாய், என் சிருஷ்டிகரை சந்திக்க ஏற்படுத்தி வைத்த ஏற்பாடு.... "காட்டு புஷ்பங்களை கவனித்துப் பாருங்கள்" என ஆண்டவர் எனது மகிழ்ச்சிக்காகவே கொடுத்த கட்டளை! என்பதை, ஆழமாய் உணர்ந்தபடியால், அப்படியொரு மகிழ்ச்சி எனக்குள் வந்தது. இப்போது எனது அழகிய தோட்டத்தில், வண்ண வண்ண பூக்களின் மூலமாகவும், சிட்டுச் சிட்டு கலரான பறவைகளின் மூலமாகவும் என் விசுவாசம் ஓங்கி வளர்ந்து, மகிழ்ச்சியினால் என் உள்ளம் நிறைந்தது. இப்போது என் கணவர் சொல்லி அல்ல, நானே அடிக்கடி தோட்டத்திற்குச் சென்று, அங்கு அமர்ந்து, வண்ண பூக்களையும் ஆடிப்பாடும் குருவிகளையும் அழகிய புற்களையும் கண்டு மகிழ்ந்து, என் நேசரோடு உறவாடி ஆனந்தமடைந்தேன்!

என் தோட்டத்து அனுபவத்தில் நான் கற்றுக்கொண்ட பாடம் என் ஜீவியத்திற்கு மிக அருமையானதாய் மாறியது. நான் இவ்வாறு தனிமையில் என் தேவனைத்தேடி அமைதியான நிலையில் அவரோடு அமர்ந்து உறவாடி வாழ்ந்திருக்கும் இன்றைய நிலையை, நான் முன்பே கண்டிருந்தால் "என்னுடைய அனைத்து சிலுவைகளும் மிகச் சிறியதும் எளியதுமாய் மாறியிருக்கும்" என்பதை உணர்ந்தேன்.

– ரத்னம்